**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 313/2006</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **12.11.2025** |
| **பெயர்** | **சுரேஷ்பாபு** |
| **த/பெ** | **இராதாகிருஷ்ணன்** |
| **சாட்சி** | **DW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.15 பி.எம்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

12. 05.07.2022–ல் எங்கள் தரப்பில் ஒரு எதிருரரை தாக்கல் செய்யப்பட்டது நினைவில் உள்ளதா என்றால் நினைவில் உள்ளது. 24.11.1979–ல் வாதிகள் கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு நாங்கள் வழக்கு சொத்தை மேம்படுத்தி பிரவேசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அதன் பிறகு 1981–ல் இருந்து 1997 வரை பயிர் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். குத்தகையும் கொடுத்திருந்தோம்.அவ்வாறு குத்தகை செலுத்தியதற்காக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கலாம்.

13. 1994–ல் கிரைய ஒப்பந்த்தின் மூலம் ஸ்வாதீனத்தை ஒப்படைப்பதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். பத்தி 2ல் நாங்கள் உரிமையாளர்கள் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். வழக்கு சொத்து எதன் அடிப்படையில் அனுபவித்து கொண்டு வருகிறோம் என்றால் குத்தகை தாரர் என்ற அடிப்படையில் அனுபவித்து கொண்டு வருகிறோம். மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் நாங்கள் தாக்கல் செய்த வா.சா.ஆ 11 ஆவணத்தில் வழங்கிய உத்தரவின் மூலம் நாங்கள் குத்தகை தாரர்கள் என நிரூபணம் செய்ய இருந்த முச்சிலிக்கா ஆவணத்தை குறியீடு செய்யக் கூடாது என தீர்மானிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

14. முச்சிலிக்கா ஆவணத்தை நீதிமன்றம் ஏற்க கூடாது என்று அதனுடன் சேர்த்து எதிரிடை பாத்தியத்தை பிரதிவாதிகள் கோர இயலாது எனவும் தீர்மானிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேலே குறிப்பிட்ட பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த பதிலுரை (counter claim) பத்தி 2–ல் 12 வருடங்களுக்கு மேலாக பிரதிவாதிகள் அனுபவித்து வருவதால் அவர்களுக்கு எதிரிடை அனுபவம் உரிமை உள்ளது என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் தெரியாது. மேலே குறிப்பிட்ட counter claim பத்தி 7–ல் பட்டா வாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் தெரியாது.

15. அரசாங்கத்திற்கு 35 வருடங்களாக கிஸ்து செலுத்தியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் 4 ரசீதுகளை தவிர வேறு ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்ன 4 ரசீதுகளும் வாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேலே குறிப்பிட்ட counter claim பத்தி 10–ல் பிரதிவாதிகள் எதிரிடை பாத்தியத்தின் மூலம் உரிமையாளர்கள் என விளம்புகை செய்ய கோரி பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் நாங்கள் தான் அனுபவித்து கொண்டு வருகிறோம்.

16. மேற்கூறியவாறு பரிகாரம் பெற பிரதிவாதிகள் தகுதி படைத்தவர்கள் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் மேலே குறிப்பிட்ட counter claim–க்கு மறுபதில் தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். வாதிகளின் மறுபதில் பத்தி 7–ல் தமிழ்நாடு நீதிமன்ற கட்டண திருத்தச்சட்டத்தில் 6/2017ன் படி பிரிவு 7–ன் கீழ் சந்தை மதிப்பை தீர்மானம் செய்வதற்கு சார்பதிவு அலுவகத்தின் வழிகாட்டி மதிப்பின் படி தான் நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என வாதுரை செய்துள்ளார்கள் என்றும் அதன்படி 1 ஏக்கர் 2 கோடியே 68 லட்சம் என குறிப்பிட்டுள்ளார்கள் என்றாலும் அதன்படி வழக்கு சொத்தில் கண்டுள்ள 3 ஏக்கர் 96 செண்டிற்கு 10 கோடியே 61 லட்சத்து 28 ஆயிரம் என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்ற கட்டணமாக பாதி மதிப்பீடு ரூ. 5 கோடியே 30 லட்சத்து 64 ஆயிரம் என நிர்ணயம் செய்யும் பட்சத்தில் நீதிமன்ற கட்டணமாக ரூ. 15 லட்சத்து 91 ஆயிரத்து 920 செலுத்தி இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு செலுத்தி இருக்கும்பட்சத்தில் இந்நீதிமன்றத்தில் அதிகாரவரம்பு பணஆள்வரை இல்லை என்று குறிபிடப்பட்டுள்ளது என்றால் அந்த கூற்று சரியல்ல.

17. அதன்பிறகு மேற்கூறிய கட்டணத்தை செலுத்துமாறு 19.08.2024 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது என்றால் சரிதான். அதனால் மேற்கொண்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தாத காரணத்தினால் இடைக்கால மனு எண் 07/2022வில்

பிறப்பித்த உத்தரவின் மூலம் இந்நீதிமன்றம் இந்த வழக்கு ஏற்புடையதல்ல என உத்தரவிட்டிருந்தது என்றால் சரியல்ல. அந்த உத்தரவானது வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிகள் கோரிய எதிரிடை பாத்தியதை உண்மையை மறைத்து பொய்யாக இந்த வழக்கில் கோரியுள்ளோம் என்றால் சரியல்ல. மோசடியாக 3ம் பிரதிவாதிக்கு நாங்கள் எழுதி கொடுத்த கிரையம் பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் இடைக்கால மனு எண் 1433/2006 பிறப்பித்த உத்தரவின் மூலம் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை மேலும் இந்த வழக்கு முடியும் வரை விற்பனை செய்யக் கூடாது என தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

18. மேற்குறிப்பிட்ட உத்தரவை எதிரத்து பிரதிவாதிகள் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் இன்று வரை பிரதிவாதிகள் அனுபவித்து வருவதாக பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் 3ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து மோசடியாக கிரையப்பத்திரம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. மேலே குறிப்பிட்டுள்ளது போல் மோசடியாக கிரையப்பத்திரம் ஏற்படுத்தியதால் தான் 3ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. அதனால் அந்த கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் வாதிகளுக்கே உரிமையானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.55. பி.எம்.**